# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


2007, செத்தெம்பர் மாதம் 21 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாசிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ.— 18/2007

## 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

*1.* இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

*2.* (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் பந்தி (இ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(இஇ) தேசிய மழைநீர்க் கொள்கைக்கும் செயல் நுணுக்கங்களுக்கும் இணங்க, இருக்க வேண்டியதான 8அ என்னும் பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட அபிவிருத்திக் கொள்கையில் உள்ளடக்கப்படுவதற்கு மழைநீர் சேகரிப்பிற்கான செயற் திட்டமொன்றை வகுத்தல் ;";

*3.* முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை அதன் 4 ஆம் விடயத்தின் (உ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத்திருத்துதல்.

"(உ) மழைநீர் சேகரிப்பதற்கு அவசியமான வழிமுறைகள் உட்பட ஒதுக்கிடத்தின் வடிகாற் தொகுதியும் கூரையும்.";

*4.* இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*